HOTEL GNANAMS
Coffee Shop
Ex Lunch with Soups and Sweets 28/-
BAR
BEER 30/- V.S.O.A. 7/50
OLD ARRACK 6/50
Also:
Chinese Meals and Soup 25/- to 40/-

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

LIFE IS MADE FOR LIVING
Hotel Gnanams
* Green Chinese Restaurant. (Excellent Food)
* Capri BAR and BEER GARDEN
* Coffee Shop
* A/C or non A/C Rooms
Tele: 22088 28067

சுடர் 1 ... ஆனி 06 உ வெள்ளிக்கிழமை ... 1406 ... 11 (20-06-1986) UTHAYAN: LIVELY TAMIL DAILY ... 183

# மாகாணசபை யோசனை இந்தியாவுக்கு அதிருப்தி

## இரு தரப்பாரும் ஏற்கக்கூடிய திட்டத்தை தானே தயாரிக்கும்?

புதுடில்லி ஜூன் 19

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு இலங்கை அரசு சமர்ப்பித்திருக்கும் மாகாணசபை யோசனை குறித்து இந்திய அரசாங்க வட்டாரங்கள் திருப்திப் படவில்லை

இலங்கையின் புதிய யோசனையை கடந்த இரண்டு நாட்களாக இந்திய வெளிநாட்டமைச்சின் உயரதிகாரிகள் நுணுக்கமாக ஆராய்ந்தனர்

இந்த யோசனை இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்று பொதுவான கருத்து நிலவுகிறது.

பிரஸ்தாப யோசனைகளை அடிப்படையாக வைத்து, தமிழர் குழுக்களை சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்பு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அதிகாரிகள் இங்கு கருத்து வெளியிட்டனர்

அதனைத் தொடர்ந்து தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் திருப்தியளிக்கக் கூடிய நியாய பூர்வமான புதிய வடிவமைப்பு ஒன்றை இந்தியா தயாரித்தால் என்ன என்பது குறித்து புதுடில்லி வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

இதேவேளை இலங்கை அரசின் மாகாணசபை யோசனை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தை அறிய வேண்டும் எனவும் அதிகாரிகள் மட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் இப்போது புதுடில்லியில் தங்கியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

முச்சந்திமுரளி



உப்பிடி, இருந்திருந்தாப் போலை அர்த்த புஷ்டியான கதையளும் வரத்தான் செய்யுது, சும்மா சொல்லக் கூடாது...!

## நகரில் ஷெல் குண்டு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ் கோட்டையில் இருந்து நேற்றிரவு 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

நேற்றிரவு எட்டுமணி அளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஷெல் குண்டுகள் கொட்டடிப் பகுதியிலும் கடற்கரைப் பக்கமாகவும் விழுந்து வெடித்ததாகத் தெரியவருகிறது

தொடர்ச்சியாக ஐந்து ஷெல் குண்டுகள் வெடித்தன. (2-10)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு இல்லையேல் நிதி உதவி இல்லை

### சம்பந்தப்பட்ட நாடுகள் தெரிவித்ததாக ரொனி தகவல்

லண்டன், ஜூன் 19

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லையெனில் இலங்கைக்கு நிதி உதவி கிடைக்காது.

எமது நாட்டுக்கு நிதி உதவி வழங்கும் குழுவில் உள்ள நாடுகள் தனித்தனியாக இதனை எமக்குத் தெரிவித்துவிட்டன

இவ்வாறு இலங்கையின் நிதிஅமைச்சர் திரு. ரொனி டி. மெல் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்,

பி. பி. ஸி வானொலி திரு ரொனி டி. மெல் சொன்னதாகப் பின்வருமாறு ஒலிபரப்பியது:—

இனப்பிரச்சினையை பேச்சுக்கள் மூலம் தீர்க்க இலங்கை அரசு உண்மையிலேயே விரும்பவில்லை என்று தாம் உணர்வதாகவும் —

இராணுவத் தீர்வில் தான் இலங்கை அரசு அக்கறை காட்டுகிறது என்றும் -

இலங்கைக்கு உதவும் நாடுகள் கூறிவிட்டன

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத பட்சத்தில் தற்போதைய உதவியை தொடர்ந்து தரக்கூடிய நிலையில் தாங்கள் இல்லை என்று நிதிஉதவி வழங்கும் குழுவில் உள்ள நாடுகள் தனித்தனியாக எமக்குத் தெரிவித்துவிட்டன

இலங்கைக்கு வெளிநாட்டு உதவி கிடைப்பதில் பெரும் தடங்கல் ஏற்படும் என்று கடந்த புதன்கிழமை (18-06-86) உதயனில் முன்பக்கத் தலைப்புச் செய்தி வெளியாகி இருந்தது, அது வாசகர்கள் அறிந்ததே.

அந்தச் செய்தி ஊர்ஜிதமாகும் வகையில், அமைச்சர் ரொனி பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. (அ-உ-எ)

## முல்லைத்தீவில் நடந்த மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று நடைபவனியாக வந்த நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்களை நோக்கி போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

இதன் காரணமாக பல சிப்பாய்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்பட்டது

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

நேற்றுப் பகல் பத்து மணி அளவில் முல்லைத்தீவு — புதுக்குடியிருப்பு காட்டுப் பாதையூடாக குண்டு வீச்சு விமானங்கள் மேலே பறக்க நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் வாகனங்கள் சகிதம் நடைபவனியாக வந்துகொண்டிருந்தனர்.

அவர்களை எதிர்கொண்ட போராளிகள் கடும் தாக்குதல் நடத்தினர் என்று தெரிய வருகிறது.

இதே வேளை குண்டு வீச்சு விமானங்கள் இப்

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

20 - 6 - 1986 வெள்ளிக்கிழமை

சுபநேரம்: 5.54 முதல் 7.24 வரை

ராகுகாலம்: 10.24 முதல் 11.54 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### பென்ஷன் கொடுப்பனவு

யாழ்ப்பாணம் ஜூன் 20

தபால் நிலையங்கள் மூலமாக பென்ஷன் பெறுபவர்களுக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகளுக்குரிய திகதிகளை யாழ் தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

திகதிகள் பின்வருமாறு:-

25:- ஆம் திகதி அள

(4-ம் பக்கம் பார்க்க)

### சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூன் 20

கம்யூனிஸ்ட் கட்சியினால் நியமிக்கப்பட்ட புதிய கலவான எம்பியான திரு டி. யூ. குணசேகரா நேற்று நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (இ-எ)

## இராணுவ உயரதிகாரியும் பல சிப்பாய்களும் பலி!

### கிளிநொச்சியில் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கிளிநொச்சியில் நேற்று பாதுகாப்பு படைகள்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்தினர்

இதனால் ஒரு இராணுவ உயரதிகாரி அந்த இடத்திலேயே பலியானார். மேலும் பல சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஐந்துக்கும் அதிகமான சிப்பாய்கள் காயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

நேற்று கிளிநொச்சி பொலீஸ் - இராணுவ கூட்டு முகாமில் இருந்து தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்ட இராணுவ சிப்பாய்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில்

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் அப்பாவி மக்கள்தான் கைது செய்யப்படுகிறார்கள்

### இணைப்பு அதிகாரிக்கு புகார்

யாழ்ப்பாணம் ஜூன் 20

வவுனியாவில் இடம் பெறும் தேடுதல் நடவடிக்கையின்போது அப்பாவி மக்கள்தான் கைது செய்யப்படுகின்றனர்;

இதனை வவுனியா பிரசைகள்குழு, வவுனியா இணைப்பு அதிகாரி கேர்ணல் கொப்பேகடுவையின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களின் சார்பில் சொல்லப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே வவுனியா பிரசைகள்குழு, இணைப்பு அதிகாரியின் கவனத்துக்கு இவ்விஷயத்தைக் கொண்டு வந்தது.

நிரபராதிகள் என்று காணப்படுவோர் விடுதலை செய்யப்படுவர் என்று இராணுவ அதிகாரி தரப்பில் தெரிவிக்கப்பட்டது,

கடந்த ஒரு வாரகாலத்தினுள் வவுனியாவின் பல பகுதிகளில் 100க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ-6)

### டீசல் வந்தது

யாழ்ப்பாணம் ஜூன், 20

யாழ் பஸ்டிப்போவுக்கு போதுமான அளவு டீசல் நேற்றுலொறிமூலம் வந்து சேர்ந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து சகல பஸ் சேவைகளும் நேற்று வழமைக்குத் திரும்பின.

தூர இடங்களுக்கான பஸ் சேவைகளும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன. (இ-10)

## வடக்கிலுள்ள 8 லட்சம் தமிழரைக் கொன்றால் பிரச்சினைதீர்ந்துவிடுமா?

### இந்தியா எம்மை அழித்து விடும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 20

தீவிரவாதத்தை ஒடுக்க நான் என்ன செய்யவில்லை என்பதை மகாசங்கத்தினர் சொல்ல வேண்டும்.

வடபகுதியில் உள்ள எட்டு லட்சம் தமிழரையும் துப்பாக்கிகள், ஹெலிக்கொப்டர்களைப் பாவித்து நாம் கொல்ல வேண்டுமா?

அப்படிச் செய்தால் என்ன நடக்கும்? சர்வதேச உதவிகள் இலங்கைக்குக் கிடைக்காமல் போய்விடும் இந்தியாவினால் எம்மை அழித்து விட முடியும்

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்.

வாதுவ என்ற இடத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

அனுராதபுரம், முதலிக்குளம் படுகொலைகள் பற்றி ஏனையோரிலும் பார்க்க நான் அதிகம் கவலைப்படுகின்றேன்;

இவற்றைக் கண்டு மக்கள் பயப்படக் கூடாது. பயப்பட்டதாக மக்கள் காட்டிக்

(4 ம் பக்கம் பார்க்க)

## பண்ணைப் பாலத்தில் சிலிண்டர்கண்ணிவெடி சிப்பாய்கள் மீட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

பண்ணைப் பாலத்தில் சிலிண்டர் கண்ணிவெடி ஒன்றை சிப்பாய்கள் புதன்கிழமை மீட்டெடுத்ததாக கூறப்படுகிறது.

புதன்கிழமை இரவு பண்ணைப் பாலத்தில் ரோந்து சுற்றி வந்த சிப்பாய்கள் பண்ணைப் பாலத்தருகே கிடந்த சிலிண்டர் கண்ணிவெடி ஒன்றினையும் சில வயர் துண்டுகளையும் மீட்டெடுத்தனர்.

இதனைக் கண்ட போராளிகள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சிப்பாய்களும் பதிலுக்கு தாக்குதல் நடத்தியதன் காரணமாக இரவு வேளையில் இப் பகுதியில் பதற்றம் நிலவியது. (இ - 10)

## இராணுவம்-போராளிகள் வயாவிளானில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வயாவிளானில் இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியேறிய சிப்பாய்கள் மீது போராளிகள் கடும் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது இத் தாக்குதலின்போது மூன்று சிப்பாய்கள் பலியானதாகவும் ஐந்து பேர்படுகாயமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது;

நேற்றுக் காலை பத்து மணியளவில் புன்னாலைக் கட்டுவன் பகுதியை நோக்கி ஐம்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் நடைபவனியைத் தொடர்ந்தனர்.

இவர்களுக்கு பின்னால் கவச வாகனங்களும்

(4ம் பக்கம் பார்க்க)

### சங்கானையில் அம்பாள் திருஉலா

யாழ்ப்பாணம், ஜூன். 20

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவ இறுதி நாள் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறும்.

பால் அம்பாளுக்கு விசேஷ அபிஷேக-ஆராதனைகள் நடைபெற்று பூசைகள் நிகழும்.

நாளை மாலையில் அம்பாள் கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக திருஉலா வருவார்.

## வயாவிளானில் 8 சிப்பாய்கள் பலி

### மக்கள் விடுதலைப் படை தாக்கியதாக ஈ. பி. ஆர். எல். எப் அறிவிப்பு

யாழ்ப்பாணம். ஜூன் 20

வயாவிளானில் நேற்று நடைபெற்ற தாக்குதலில் 8 சிப்பாய்கள் பலியானதாக ஈ பி ஆர் எல் எப் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை வருமாறு:-

நேற்று (19-6-86) காலை 10 மணி அளவில் வயாவிளான் இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சிறீலங்கா சிப்பாய்கள் மனித

(4ம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆரின் இறுதியோசனை சர்வகட்சி மாநாட்டில்

### லலித் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 20

ஜூன் 25இல் நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தன இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தனது இறுதி யோசனைகளைச் சமர்ப்பிப்பார்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி புதன் மாலை கொழும்பில் நடைபெற்ற மத சம்பந்தமான கூட்டம் ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

ஆயுதப் போராட்டத்தைத் தீவிரவாதிகள் கைவிடும் வரை இலங்கை அரசாங்கம் தனது ஆயுத படையின் பலத்தை அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

ஆயுத பல அதிகரிப்பில் தான் அரசியல் தீர்வு காணும் சந்தர்ப்பமும் ஏற்படும்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார். (உ-எ)

## இரகசிய விளக்கங்கள் பேர்னுட்-சிதம்பரம் சந்தித்துப் பேச்சு

புதுடில்லி, ஜூன் 19

இணை அமைச்சர் பி. சிதம்பரத்தை புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பேர்னுட் திலகரத்தின கடந்த வியாழன் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை கடைசியாக இந்தியாவுக்கு அனுப்பியுள்ள இரகசிய விளக்கங்கள் குறித்து இருவரும் பேச்சுக்கள் நடத்தியிருக்கலாம் என்று தெரிகிறது

புதன்கிழமை இரவு இலங்கைத் தூதர் பேர்னுட் திலகரத்தின பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து, இலங்கையின்

(4ம் பக்கம் பார்க்க)

### குருநகர் கடற் பகுதியில் புதிய முகாம்?

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ் குருநகர் கடல் பகுதியில் உள்ள கல்முனை என்ற இடத்தில் கடற்படை சோதனை முகாம் ஒன்று அமையலாம் என்று மிக நம்பிக்கை

(4ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். குடாநாட்டில் ஆகஸ்டில் அறுவடை

# பம்பாய் வெங்காய

# இறக்குமதியை கட்டுப்படுத்துக

## விவசாய அமைச்சுக்கு பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன். 20 யாழ் குடாநாட்டில் பம்பாய் வெங்காய அறுவடை ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாக உள்ளது. அக்காலத்தில் பம்பாய் வெங்காய இறக்குமதியைக் கட்டுப்படுத்தி உள்ளூர் உற்பத்திக்கு நல்ல சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள்!

இப்படி யாழ்மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளர் திரு எஸ். கிருஷ்ணபிள்ளை விவசாய அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்து இருக்கின்றார்.

விவசாய அமைச்சச் செயலாளருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே உதவிப் பணிப்பாளர் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றார்.

கொழும்பில் ஏப்ரல் 7,8 ஆம் திகதிகளில் நடந்த விவசாய உதவிப் பணிப்பாளர்கள் மாநாட்டிலும் யாழ் உதவிப் பணிப்பாளர் இந்தவேண்டுகோளை விடுத்திருந்தார்.

கடிதத்தில் உதவிப் பணிப்பாளர் திரு. கிருஷ்ணபிள்ளை கூறியிருப்பதாவது;

யாழ் குடாநாட்டில் 250 ஏக்கரில் பம்பாய் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அராலிப் பகுதியில் மட்டும் 200 ஏக்கரில் இச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு 6 மெட்ரிக் தொன் விளைச்சல் காணபடும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தம் 700 முதல் 800 மெட்ரிக் தொன் இம்முறை மேலதிகமாக உற்பத்தியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அறுவடை ஆகஸ்டில் ஆரம்பமாகி அக்டோபர் வரை நீடிக்கும்.

அக்காலத்தில் உற்பத்தியாளர்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

ஆகவே அக்காலத்தில் பம்பாய் வெங்காயம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாவதைக்கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க சிபார்சு செய்யுங்கள்.

இப்படி உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-எ)

## ஹிந்தி சினிமா உலகில் பாக்கியராஜ்

தமிழ்த் திரையுலகில் இருந்து ஹிந்தி சினிமாவிற்குப் போனவர்கள் பலர்.

அதேவரிசையில் தற்பொழுது சேர்ந்துள்ளவர் கே பாக்கியராஜ்.

புதிய வார்ப்புகள் படத்தில் நடிகனாக அறிமுகமான பாக்கியராஜ் பல வெற்றிப் படங்களைத் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு வழங்கியுள்ளார்.

சிறந்த கதை-வசன கர்த்தா - இயக்குநரான பாக்கியராஜை பல வெற்றி விருதுகளும் நாடியுள்ளன.

தற்பொழுது அவரது நெறியாள்கையில் வந்துள்ள புதிய படம் — —ஆந்ரே, ' ராஸ்தா'

தமிழ் ரசிகர்களுக்கு பாக்கியராஜ் இம்முறை ஏமாற்றத்தைத் தந்தாலும் நிச்சயமாக ஹிந்திப் படப் பிரியர்களுக்கு இப்படம் பெருவிருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படத்தின் கதை வசனம் பொறுப்புகளையும் பாக்கியராஜே ஏற்றுள்ளார்

அமிர்தாப் பாச்சன் பிரதம வேடத்தில் நடிக்கின்றார்.

பிரமாண்டமான செலவில் தயாரிக்கப்பட்டுள்ள இ படம் ஒரு சாதனையை ஏற்படுத்துமாயின் பாக்கியராஜ் நிரந்தரமாகவே ஹிந்தி திரையுலகை அரவணைத்து விடக்கூடும் என்ற ஏக்கமும் தமிழ்சினிமா பிரியர்களிடம் —விசேஷமாக பாக்கியராஜ் ரசிகர்களிடம் தோன்றியுள்ளதை அவதானிக்கக் கூடியதாகஇருப்பதாக சென்னையில் இப்படம் திரையிட்டுள்ள இடங்களில் பேசிக்கொள்கின்றார்கள்.

தினசரி சினிமா

## "விவசாய உற்பத்தியும் காலதேவைப் பூர்த்தியும்"

### ஆய்வு நிறுவன 2 நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜூன் 20 "எமது பிரதேசங்களில் விவசாய உற்பத்தியும், சயதேவைப் பூர்த்தியும்" என்ற தலைப்பிலான இரு நாள் கருத்தரங்கு "ஆய்வு" நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு யாழ் பல்கலைக்கழகத்தில்கைலாசபதி அரங்கில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் (21-6-86--22-6 86) காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரைக்கும் நடைபெறும்

முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ மதனகரன். இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ்பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி எஸ் பாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமைவகிக்கின்றார்கள்

கலாநிதி ஆ. இ. விவேகானந்தன், திரு ஏ செந்தில்நாதன், திரு. பொன் மெகன், லநீர் சரித இயலாளர் திரு த. குணசேகரம், திரு வி. துவசங்கரி, திரு எஸ் பாலச்சந்திரன், திரு,ம ஜோர்ஜ் பிள்ளைநாயகம் ஆகியோர் முதல்நாள் கருத்துரை வழங்குவார்கள்.

திரு. மா. பாலசுப்பிரமணியம், செல்வி.பத்மினி மயில்வாகனம், கலாநிதி பா சிவகடாட்சம், திரு ம. சி. வில்பிரட், யாழ். உதவி விவசாய பணிப்பாளர் திரு ச. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இறுதி நாள் நிகழ்ச்சிகளில் உரையாற்றவார்கள். (இ-9)

## குருநகர் புதியசந்தை வர்த்தகர் சங்கம் உதவி

யாழ்ப்பாணம் ஜூன் 20 மண்டைதீவில்அண்மை உயிரிழந்த குருநகர்மீனவர் குடும்பங்களுக்கு குருநகர் புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கம் 8005 ரூபா வழங்கியது.

கடல் தொழில் அபிவிருத்தி சங்கத்தலைவரிடம் இப்பணம் கையளிக்கப்பட்டது.

யாழ். குருநகர், புதிய சந்தை, வர்த்தகர், சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் செ. அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது

அவ்வமயம் மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் கொடூரமாக கொலையுண்டு மடிந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி அஞ்சலி செலுத்தினார்கள் (இ)

## வள்ளம் கவிழ்ந்து சிப்பாய்கள் பலி

கொழும்பு, ஜூன். 20 மின்னேரியாக் குளத்தில் வள்ளம் ஒன்று கவிழ்ந்ததில் மூன்று சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

ஒருவரின் சடலம் கண்டு எடுக்கப்பட்டது. கடற்படையினர் ஏனைய இரண்டு சிப்பாய்களின் சடலங்களைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

பயிற்சிபெற்று வெளியேறும் அணிவகுப்பில் கலந்துகொண்டிருக்கையில் இவ்விபத்து ஏற்பட்டது. (இ-ஒ)

## ந.ல.ச.சவுக்கு அழைப்பு

கொழும்பு ஜூன் 20 சர்வகட்சி மாநாட்டுக்கு திரு வாசுதேவ நாணயக்கரா தலைமையிலான நவலங்கா சமசமாஜக் கட்சியையும் அரசாங்கம் அழைத்துள்ளது. (இ-ஒ)

## ஜே. வி. பி. உறுப்பினரை தேடி வலைவீச்சு

கொழும்பு, ஜூன் 20 தடைசெய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே வி பி.) பத்து உறுப்பினர்களைத் தேடி பொலீஸார் வலைவிரித்துள்ளனர்.

இவர்கள் முன்னணியில் தீவிர உறுப்பினர்களாம்

அண்மையில் நுகேகொடையில் உள்ள வீடு ஒன்றில் இவர்கள் 'வகுப்பு' ஒன்றுநடத்தியதாகப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தது

அதைத் தொடர்ந்தே இத்தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-எ-2)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## பிரசைகள் குழு முறையீடு

யாழ்ப்பாணம் ஜூன் 20 இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டதினால் பாதிக்கப்பட்ட சுமார் 130 குடும்பங்கள் பற்றி மயிலிட்டி பிரசைகள் குழு கடந்த திங்கட்கிழமை யாழ் அரச அதிபர் திரு வை எம் பஞ்சலிங்கத்தை சந்தித்து முறையிட்டது.

தொழில்,வீடு, வாசல் இழந்த அகதிகளுக்குஉடனடியாக நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி மயிலிட்டி பிரசைகள் குழு, அரச அதிபரிடம் விண்ணப்பித்துக் கொண்டது

10, 11 அம திகதிகளில் நடந்த

## வல்வெட்டித்துறை தாக்குதலில் 5 பேர் பலி! 76 பேர் காயம்!!

### பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன். 20 ஜூன் 10, 11 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் ஈவிரக்கமற்ற கடல், வான தரைத் தாக்குதலில் 5 பொது மக்கள் உயிரிழந்தனர். 26 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர், 50பேர் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்றனர்.

இப்படி வல்வெட்டித்துறைப் பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு நாள் தாக்குதல் காலை 5 மணிக்கு ஆரம்பமானது.

தரையில் இருந்து மோட்டோ தாக்குதலும் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதலும் வானத்தில் இருந்து குண்டுத் தாக்குதலும் இடம் பெற்றன.

நெருப்புப் பந்து போன்ற பொருள்களும் ஹெலிக் கொப்டரில் இருந்தும் விமானங்களில் இருந்தும் வீசப்பட்டன. அவை விழுந்த இடம் தீப்பற்றி எரிந்தது.

ஜப்பானிய விமானத் தாக்குதலில் இருந்து தப்ப பதுங்க குழிகள் தோண்டப்பட்டன. அப்படி மீண்டும் பதுங்கு குழிகளை மக்கள் வெட்டாமல் இருந்திருந்தால், இந்த இரண்டு நாள் தாக்குதலில் வல்வெட்டித்துறையில் நிறையப் பேர் உயிரிழந்திருப்பர்.

இந்த விமானத் தாக்குதலில் குழந்தைகளும் இறந்திருக்கின்றனர்.

திருமலையில் இருந்து வந்த தமிழ் அகதிகள் தங்கியிருந்த 85 குடிசைகளில் 50 குடிசைகள் இத்தாக்குதலில் தீப்பற்றி எரிந்து விட்டன.

இந்த இடத்தில் போராளிகளுக்கும் ஆயுத படையினருக்கும் இடையே சண்டை நடைபெறுவதை நாம் கவனிக்காமல் இல்லை

ஆனால் நாம் வலியுறுத்த விரும்புவது, எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் போராளிகளுக்கு எதிரானதாக அமையவில்லை.

குடிமக்கள் இருக்கும் பகுதிகளை இலக்கு வைத்தே இத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன

இதனால் அப்பாவிக் குடிமக்கள் உயிரிழந்தும் காயப்பட்டும் வருகின்றனர்.

பாதுகாப்புப்படையினர் முழுத் தமிழருக்கும் எதிராகவே ஈடுபட்டுள்ளனர் என்ற உணர்வு தான் தமிழர் மத்தியில் இத்தாக்குதல்களினால் ஏற்பட்டுள்ளது.

தமிழரையும் இந்த நாட்டின் ஒரு பகுதியினராக அரசு கருதினால் இப்படியான செயலை அனுமதிக்காது என்ற எண்ணமும் ஏற்படுகின்றது.

இப்படி வல்வெட்டித்துறை பிரசைகள் குழு கடிதத்தில் தெரிவித்துள்ளது. (இ-எ)

## பதிவு செய்யுமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 20 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை கொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் பிரகாரம் கட்டுப்படுத்தப்பட்டபீடை கொல்லிகளை (கிருமிநாசினி) விற்பனை செய்யும் அல்லது களஞ்சியப் படுத்தும் அல்லது விநியோகம் செய்யும் சகலரும் கமத் தொழில்திணைக்களத்தில் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதுவரை எவரும் அவ்வாறு பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடனடியாக விண்ணப்பித்து தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் திரு. இ. இரகுபதி கேட்டுள்ளார். (உ - 10)

## காந்திய இயக்க தலைவர் டேவிட்டுக்கு 20 வருடச் சிறை

கொழும்பு, ஜூன் 20 காந்திய இயக்கத் தலைவர் சொலமன் அருளானந்தம் டேவிட்டுக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கு எதிரி இல்லாமல் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நீதிபதி திரு டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் நடைபெற்றது.

1981-1983 இல் வவுனியா பகுதியில் உமா மகேஸ்வரன் நடமாட்டம் பற்றி தகவல் கொடுக்காதது—

சந்ததியார் நடமாட்டம் பற்றி தகவல் கொடுக்காதது—

சந்ததியார் இந்தியா தப்பியோட உதவி புரிந்தது ஆகிய மூன்று குற்றங்கள் இவர் மீது சுமத்தப்பட்டன.

தீர்ப்பு வழங்கிய நீதிபதி எதிரி மீது பிடியாணை பிறப்பித்தார். (இ-21)

## மின் அலுவலர் சேவை

ஊர்காவற்றுறை, ஜூன்.20 யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் நாரந்தனை வடக்கு உப அலுவலகத்தின் பதில் மின்சார உத்தியோகத்தரின் வேலை நாட்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன

இதனால் மின் பாவனையாளர்கள் திருப்தி தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே கடமையாற்றி வந்த இவ்வுத்தியோகத்தர் இனிமேல் இரண்டு நாட்கள் இங்கு சமூகமளிப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பட்டண உப அலுவலகத்தில் நிரந்தரமாக கடமையாற்றும் இவ்வதிகாரி இரண்டு நாட்கள் நாரந்தனை அலுவலகத்தில் கடமையாற்றுவதற்கான உத்தரவை யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கியுள்ளார். (உ-16)

## கீதையின் சிறப்பு அம்சம் குறித்து சுவாமி சித்ருபானந்தா

யாழ்ப்பாணம்,ஜூன். 20 கீதையின் சிறப்பம்சம் கடவுளால் இது சொல்லப்பட்டது என்பது மட்டுமல்ல சாதாரண மனிதனையும்மேல்நிலைக்கு கொண்டு செல்லும் தன்மையும் இதற்கு உண்டு.

திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தில் நடைபெற்ற பகவக்கீதை விரிவுரையில் கலந்து உரையாற்றுகையில் சுவாமி சித் ருபானந்தா இவ்வாறு கூறினர்.

—அவர் வேலும் கூறியதாவது:—

உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களுக்கு கீதை விளக்கம் அளிக்கின்றது. தாய அன்னை சாரதாதேவியரின் வாழ்க்கைக்கும் கீதைக்கும் முக்கிய தொடர்புகள் இருப்பதைக் காணலாம்.

கீதையில் கூறிய எத்தனையோ வாழ்க்கைத் தத்துவங்களை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிச் செயல்முறைப் படுத்தினர் தூய அன்னை சாரதாதேவியார்.

ஆதலினால் தாயஅன்னையின் வாழ்க்கையைப் படிப்பவனுக்கு கீதையின் செயல்முறைப் பிரயோகம் நன்கு விளங்கும்

இப்படி அவர் கூறி... (ஒ-இ)

மக்கள் முகம்

## மணிப்புரி சமாதானகுழு நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஜூன்20 யாழ்ப்பாணம் மணிப்புரி சமாதானக் குழுவின் ஆரம்ப பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர்: திரு.நீ.அருளானந்தம், உப. தலைவர்: திரு எஸ். பெனடிக் தங்கராசா, காரியதரிசி; திரு. க. பாலசுப்பிரமணியம் (மணியண்ணை) உபகாரியதரிசி; திரு த: யோகேஸ்வரன் பொருளாளர். திரு.பி விஜயன்: உடபொளாளர்; திரு க: செல்வரத்தினம்.

திரு போ.இ.இங்ளலி, திரு எஸ். ஸ்ரீ. திருஞானராசன், திரு நபிலிப்பானந்தம், திரு. பி. சந்திரன் ஆகியோர் செயற்குழு உறுப்பினராகவும்.

திரு. ஜே. ஆரசரத்தினம், திரு. யோ. தேவ[illegible] கௌரவ உறுப்பினர் [illegible]ாகினர். (இ - ஒ)

## கத்தரியில் பூச்சி

வட்டுக்கோட்டை ஜூன் 20 காரைநகரில் செய்கை பண்ணப்பட்ட கத்தரித் தோட்டங்களில் தண்டு துளைப்பான், காய்துளைப்பான் பூச்சிகளினால் பெரும் சேதம்ஏற்பட்டுள்ளது.

தொல்புரம் கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் திரு. ச. தம்பிராசா காரைநகரிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி இத்தோட்டங்களைப் பார்வையிட்டார்.

கத்தரியில் தண்டு துளைப்பான், காய்துளைப்பான் பூச்சித்தாக்கத்தால் பெரும் அழிவு ஏற்ப்பட்டிருப்பதாக அவர் கூறினர்.

பாதிக்கப்பட்ட கத்தரிச் செடியை வெட்டி எரித்துவிடுவதோடு காபரின், அல்லது செவின் என்ற மருந்தை கலந்து விசிற வேண்டுமென்றும் அவர் ஆலோசனை கூறினர். (இ - ஒ 161)

## கொழும்பின் கைதானோரில் 100 பேர் விடுதலை

கொழும்பு, ஜூன் 20 கொழும்பு மாநகரில் அண்மையில் கைதான சுமார் 300 தமிழ் இளைஞர்களில் இதுவரை சுமார் 100 பேருக்கு மேல் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

ஏனையோர் சம்பந்தமாக விசாரணை நடக்கின்றது.

கொழும்பில் தங்கியிருந்ததற்கான காரணங்களை ஆதாரபூர்வமாக அவர்கள் நிருபித்தவுடன் அவர்களும் விடுவிக்கப்படுவர்.

மேற்கண்டவாறு கொழும்பு பொலீஸ் ஆணையாளர் திரு ஏ எஸ். செனவிரத்தின தெரிவித்தார். (எ-இ-2)


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா

★ ஜேர்மன்

★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா, பொண்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியு.

(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)

மானிப்பாய்.

குறிப்பு:

பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு முற்பணம் தந்தவர்கள் 25-06-86க்கு முன் தொடர்பு கொள்ளவும்.



## பிரயாண ஒழுங்குகள்

● கனடா

● டென்மார்க்

● சவூதி அரேபியா

(1) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்துதரப்படும்.

(2) சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர் பதவிக்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

(3) செல்ல விரும்புவோர் யூன் 25ஆம் திகதிக்கு முன்பாக தொடர்புகொள்ளவும்.

(4) எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்.

தொடர்பு: N. BALA

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

பி.கு வழி இல: (764) பலாலி வீதி. கோண்டாவில் சந்திக்கு அருகாமை.


## ஓராண்டு நினைவு அஞ்சலி



அன்னை மடியில்: 14-10-1959

ஆண்டவன் அடியில்; 20.06 1985

இராசையா சகாயநாதன் தவராசா (தவம்)

(மன்னார் அபிவிருத்திச் சபை, தொழில்நுட்ப உத்தியோகத்தரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசையாவின் மகனும்)

அன்பின் உருவமே, அழகிய தோற்றமே, குழந்தை உள்ளமே, கனவின் நிறைவே, எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய் இருந்து திடீரென எம்மைவிட்டுப் பிரிந்துவிட்ட எங்கள் அன்புத் தவமே!

நிச்சயம் எமது கனவில் உறவாடி ஆறுதல் கூற வாரீரோ! உங்கள் அன்பு முகத்தையே காணாது ஓராண்டு ஆகியும் உங்கள் நினைவு எமது மனதில் என்றென்றும் பசுமையாக நிலைத்திருக்கும்

இவரின் ஆன்ம சாந்திக்காக 20-06-86 (வெள்ளிக்கிழமை) மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில், காலை 6.00 மணிக்கு இரங்கல் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் பிரிவால் துயருறும்.

அன்புத் தாய், அண்ணன், அண்ணி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

இன்னக்கடை, மன்னார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பரிசுத்தமான மனமுடைய ஒருவன் எல்லாவற்றையும் பரிசுத்தமாகவே காண்கிறான்
—அன்னை சாரதாதேவி.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல, 15 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், 20-06-86 தொலைபேசி 24085 22073 த.பெ.23

# ஐ. நா. சபைக்கு இனப்படுகொலை விவகாரம்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் யாழ் ஆயர் அதி வந். பி. தியோகுப்பிள்ளை ஆற்றிய உரை எல்லோரது கவனத்தையும் ஈர்க்க வேண்டும்

இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் எல்லை தாண்டி விட்டதை அவரது பேச்சு உணர்த்துகிறது.

ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள், அமைதியை விரும்பும் தமிழ் மக்கள் தரை, கடல், வானம் ஆகிய முத்திசைகளில் இருந்தும் கொல்லப்படுகிறார்கள் —

ஷெல் தாக்குதல், பீரங்கித்தாக்குதல், விமானத் தாக்குதல் ஆகியன தமிழ் மக்களின் நாளாந்த அனுபவங்கள் ஆகிவிட்டன. —

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தமிழ் மாவட்டங்களில் வாழும் தமிழர்கள் எல்லோரும் ஒரே விதமாக இன்னல்களை அனுபவிக்கிறார்கள். —

தமிழ் மக்கள் அச்சத்தின் நிமித்தம் தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து அகதிகளாக வெளியேறுகிறார்கள் —

அகதிகளாக வெளியேறும் தமிழர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படுவதில்லை. —

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும், இன்னல்கள், கொடுமைகள் பற்றி அவர்கள் சார்பில் பிரசைகள் குழுக்கள் போன்ற அமைப்புகள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றன. ஆனால் எவ்வித பரிகாரமும் கிடைப்பதாயில்லை. —

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழ் இனத்துக்கு எதிரான இனப்படுகொலையில் இருந்து மக்களைக் காப்பாற்றும்படி ஐக்கிய நாடுகள் சபையைக் கேட்பதைவிட வேறு வழி இல்லை.

இவ்வாறு தமிழ் மக்களின் உண்மையான நிலையை அப்படியே தமது பேச்சில் வடித்திருக்கிறார் வணக்கத்துக்கு உரிய ஆயர்.

தமிழன் எவனும், தமிழன் படும் அவலங்களை, அனுபவிக்கும் கொடுமைகளை எடுத்துச் சொன்னால் நம்பும் நிலையில் அரசாங்கமோ அல்லது சிங்கள மக்களோ, சிங்களக் கல்விமான்களோ இல்லை.

விடயங்களை மிகைப்படுத்துவதாகவும், இப்போதைய விளைவுகள் எல்லாம் போராளிகள் செய்யும் வன்செயல்களால்தான் உண்டாகின்றன என்று கூறிச் சமாளிக்கப் பார்க்கிறார்கள்.

வெளிநாடுகளிலும் அவ்வாறே பிரசாரம் செய்கிறார்கள். தமிழர் இனப்பிரச்சினை என்று ஒன்று இங்கு இல்லை. போராளிகளையே இராணுவம் கொல்கிறது அப்பாவித் தமிழ் மக்களை அரசு துன்புறுத்துவது இல்லை என்று வெளியார் நம்பும் விதத்தில் பொய்ப்பிரசாரம் செய்கிறார்கள்.

இனப்பிரச்சினையும், தமிழர் இனப்படுகொலையும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உடையவை.

இனப்பிரச்சினையைத் தீர்க்கவோ அல்லது இனப்படுகொலையை நிறுத்தவோ தமிழருக்கு உதவ எந்த நாடும் இன்னும் முன்வரவில்லை; இந்தியாவைத் தவிர.

ஆனால் இவ்விடயத்தில் இந்தியாவின் வேகம் போதாது. அது ஆற அமர தமிழர் விவகாரத்தை அணுகுகிறது. தமிழ் நாட்டில் இருந்து எந்தளவு நெருக்குதல் இருந்தாலும் ஆமை வேகத்தில் தான் மத்திய அரசு நகர்கிறது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைத் தனித்து நின்று செயற்பட்டுப் பெற்றுவிட முடியாது. சர்வதேச ஆதரவும் தேவை. எந்தெந்த வகைகளால் பிரச்சினையைத் தீர்த்து அவலங்களை எய்த முடியுமோ அந்தந்த வழிகளை எல்லாம் கடைப்பிடிக்க வேண்டும். எந்தெந்த இடங்களை எல்லாம் அணுக முடியுமோ அந்தந்த இடங்களை எல்லாம் அணுக வேண்டும். ஆதரவு பெறவேண்டும்.

எனவே இனப்படுகொலை விவகாரத்தை ஐ. நா. வுக்கு எடுத்துச் செல்வதால் நன்மையே அன்றித் தீமை இல்லை. ஆனால் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினையை அங்கு கொண்டு செல்வதற்கு முன்னர் தமிழர் சார்பில் இவ்விவகாரம் எடுக்கப்படவேண்டும்.

ஐ. நா வுக்குக் கொண்டு செல்வதால் உடனடி நிவாரணம் கிடைக்கும் என்று நம்புவதற்கு இல்லை எனினும் ஏதோ ஒரு வகையிலாவது எமக்கு அது நன்மை செய்யலாம் அல்லவா?

# செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தின் கைப்பணிப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ் செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தின் கட்டட நிதிக்காக இன்று 20, 21, 22 ஆம் திகதிகளில் கைப்பணிப் பொருட்காட்சியும் மலிவு விற்பனையும் யாழ்ப்பாணம் கில்னர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலை 10மணி தொடக்கம் மாலை 6 மணி வரை தினமும் கைப்பணிப் பொருட்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறும்.

இன்றைய பொருட்காட்சியை சமூக சேவை உதவி அத்தியட்சகர் திருமதி க.சிவசிதம்பரம், மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், யாழ் லயன்ஸ் கழகத் தலைவர் திரு எஸ். யுவேந்திரன், செயலாயர் இல்ல முகாமைத்துவக் குழுத்தலைவர் திரு. எஸ். சிவஞானம் ஆகியோர் திறந்துவைப்பர்,

21ஆம் திகதிய நிகழ்ச்சியை யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு க. சோமசுந்தரம், யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் ஆகியோர் திறந்து வைப்பர். (இ - எ)

## வெளி உலகில்

### இலங்கை சிறுவர் பெற்றோருடன் சேர வாய்ப்பு

பிராங்பேர்ட், ஜூன் 19

6 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட 14 இலங்கைத் தமிழ்க்குழந்தைகள் மேற்கு ஜெர்மனியில் வசிக்கும் பெற்றோருடன் சேர்ந்து வாழ அனுமதிக்கப்பட்டனர்.

இக்குழந்தைகளின் பெற்றோர்கள் மேற்கு ஜெர்மனியில் ஏற்கனவே வசித்து வருகின்றனர்.

அவர்களுடன் சேர்ந்து கொள்ள இக்குழந்தைகள் கொழும்பில் இருந்து விமானமூலம் பிராங்போர்ட் விமானநிலையம் வந்தடைந்த போது அவர்களை நாட்டினுள் அனுமதிக்க குடியகல்வு குடிவரவு அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

மேற்கு ஜெர்மனியில் உள்ள கிறீன் இயக்கம் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவற்றின்பிரதிநிதிகளின் முயற்சியைத் தொடர்ந்து குழந்தைகள் பெற்றோர்களுடன் சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்

(இ-எ-2)

### லிபியாவுக்கு பிரேஸில் ஆயுதம்

திரிப்போலி, ஜூன் 19

பெருந்தொகையான ஆயுதங்களையும் போர்க் கருவிகளையும் பிரேஸிலிடமிருந்து லிபியா கொள்வனவு செய்யவுள்ளது.

100 கோடி டொலர் மதிப்புள்ள ஒப்பந்தம் என்று இதற்காக கைச்சாத்திடப்பட்டது

(இ-ஒ)

### மார்க்கோஸ் மீது குற்றச்சாட்டு

வாஷிங்டன் ஜூன் 19

பிலிப்பீன்ஸ் தேசத்தில் அரசியல் நெருக்கடிகளை உருவாக்குவதில் மார்க்கோஸ் மீண்டும் முனைகிறார் என அமெரிக்கா குற்றம். சாட்டியுள்ளது. (இ-ஒ)

### பாக் நிராகரிப்பு

இஸ்லாமபாத் ஜூன்19

ஆப்கானிஸ்தானின் தலைவர்களுடன் பாகிஸ்தானிய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானத்தை பாகிஸ்தானின் வெளிநாட்டமைச்சர் திரு. யாகுப் கான் நிராகரித்துள்ளார். (இ-ஒ)

### எழுத்தாளர் காலமானார்

றியோ-ஜூன்19

லத்தீன் அமெரிக்காவின் பிரபல எழுத்தாளரான ஜோரஜ்லூயிஸ் போஜெர்ஸ் தமது 86 வயதில் ஆஜென்டீனாவில் காலமானார். (இ-ஒ)

### எரிமலை பகுதியிலிருந்து வெளியேற மறுப்பு

பகோடா, ஜூன் 19

கொலம்பியாவின் மிகப் பெரிய எரிமலையான 'நேல்டோ' பகுதியில் குடியிருக்கும் நூற்றுக்கணக்கானவர்கள் அப்பகுதியிலிருந்து குடிபெயர்வதற்கு மறுத்து வருகின்றார்கள்

கடந்த நவம்பர் மாதம் இதே எரிமலை வெடித்துச் சிதறியதால் 23,000 மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

விஞ்ஞானிகளின் அறிவித்தல்களின்படி மீண்டும் எரிமலை வெடிக்கும் அபாயம் இருப்பதாக தெரிகிறது (இ-ஒ)

பஞ்சாப் பிரச்சினை

# முட்டுக்கட்டை நீங்கிவிட்டது

## 70,000 ஏக்கர் நிலத்தை ஹரியானாவுக்கு வழங்கச் சம்மதம்

புதுடில்லி, ஜூன். 20

பஞ்சாப் பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் பஞ்சாப் - ஹரியானா மாநிலங்களுக்கு இடையே நிலவி வந்த முட்டுக்கட்டை நீங்கிவிட்டது.

வெங்கடராமையா ஆணைக்குழுவின் சிபார்சுப்படி 70 000 ஏக்கர் நிலப்பரப்பை ஹரியானா மாநிலத்துக்கு கொடுக்க பஞ்சாப் மாநில அரசு வியாழக்கிழமை காலை ஏற்றுக்கொண்டுவிட்டது.

வெங்கடராமையா ஆணைக்குழு சிபார்சை ஏற்று சண்டிகார் நகரில் தனக்குள்ள பங்கை பஞ்சாப்புக்கு கையளிக்க ஹரியானா மாநில அரசு முன்வந்தது.

ஆனால் அதற்குப் பதிலாக 70,000 ஏக்கர் நிலப்பரப்பை விட்டுக் கொடுக்க பஞ்சாப் மாநிலம் இழுத்தடித்து வந்தது.

இது சம்பந்தமாக இந்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் பஞ்சாப் மாநில அரசு முதலமைச்சர் சுர்ஜித் பர்னாலாவுடன் புதன் இரகசியப் பேச்சுக்களை நடத்தத் தொடங்கினர்.

வியாழன் அதிகாலை 3 மணி வரை அப்பேச்சுக்கள் நீடித்தன. இந்திரா காங்கிரஸ் உபதலைவர் அர்ஜுன் சிங்கும் கலந்துகொண்டார்.

பேச்சுக்களின் முடிவில் 70,000 ஏக்கர் நிலப்பரப்பை ஹரியானாவிற்கு வழங்க பஞ்சாப் மாநில அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் பூட்டாசிங் வியாழன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (அ-எ)

## கொர்பச்சேவ் யோசனை நிராகரிப்பு

வாஷிங்டன்- ஜூன் 19

போர் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை (எஸ் ரி.ஐ) சோதனைக்கூட அளவில் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற ரஷ்ய அதிபர் திரு. கொர்பச்சேவ்வின் யோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டது.

அவரது யோசனை அடிப்படை நிலையில் பயனளிப்பது போல் தோன்றினாலும் அமெரிக்காவின் நலன்களுக்கு உகந்ததல்ல என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி கருத்து வெளியிட்டார்.

1972ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்டகுண்டு விசை ஏவுகணை ஒப்பந்தத்தை அமெரிக்க மேலும் 15ஆண்டுகளுக்கு பின்பற்றுவதாக உறுதி கூறவேண்டும் என ரஷ்ய தலைவர் விரும்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஆய்வுத்திட்டத்தின் மேம்பாட்டை அது தாமதப்படுத்திவிடும் எனவும் அந்த பாதுகாப்பு அதிகாரி கூறினார். (இ-ஒ)

### வேலைநிறுத்தம்

ஜோகனஸ்பேர்க் ஜூன் 19

தென்ஆபிரிக்காவில் அரசு அச்சுறுத்தலையும் மீறி சுவெட்டோ கிளர்ச்சியின் பத்தாததாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் லட்சக் கணக்கான வெள்ளையரல்லாத மக்கள் பொது வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

பல்வேறு இடங்களில் ஆர்பாட்டக்காரர்களோடு பொலிஸார் மோதியதில் சில பாதிப்புக்கள் ஏற்பட்டன.

முழுமையான செய்தி இருட்டடிப்பு அமுலில் இருப்பதால் வேலை நிறுத்தம் பற்றிய மிகவும் சுருக்கமான அறிக்கை ஒன்று மட்டுமே தென்ஆபிரிக்க அரசால் வெளியிடப்பட்டது.

(இ-ஒ)

## "தமிழில் விஞ்ஞானம்" மலேசிய மாநாட்டுக்கு எம் ஜி ஆருக்கும் அழைப்பு

சென்னை, ஜூன் 19

'தமிழில் விஞ்ஞானம்' என்ற தலைப்பில் 5 நாள் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவின் தலைநகரான கோலாம்பூரில் அடுத்த ஆண்டு மே மாதம் 20 முதல் நடைபெறவுள்ளது.

உலக நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் பலர் இம்மாநாட்டில் கலந்து கொள்வர்.

மாநாட்டை ஆரம்பித்து வைக்க தமிழக முதல் அமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

ஒரு நாள் மாநாடு தமிழ் இளைஞர்களுக்காகவும் ஒரு நாள் மாநாடு தமிழ்ப் பெண்களுக்காகவும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (இ-எ-2)

# அரசின் ஆகாயப் பலத்துக்கு சவாலாக போராளிகளின் பலம் மாறுமா?

யாழ் குடாநாட்டில் அரச படைகள் மே மாதம் நடத்திய 'ஆறு நாள் யுத்தம்' பற்றி லங்கா கார்டியன் ஆங்கில வார சஞ்சிகையில் அதன் ஆசிரியர் மேர்வின் டி. சில்வா எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

வடபகுதியில் சிவில் நிர்வாகமே ஸ்தம்பித்து விட்டது. போராளிகள் காட்டும் கருணையினாலும் பொறுமையினாலும்தான் சில துறைகளில் சிவில் நிர்வாகம் அங்கு நடைபெறுகிறது

மோதலின் அடிப்படை அரசியல் — இராணுவ நிலையைத்தான் சிவில் நிர்வாக ஸ்தம்பிதமும் இராணுவ முட்டுக்கட்டையும் எடுத்துக்காட்டுகின்றன.

ராஜதந்திர, பொருளாதார, உளரீதியான பிரசாரம் மிக முக்கியமானது

ஆனால் அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு கொண்ட அரசியல், இராணுவ அம்சங்களும் முக்கியமானவையே.

இந்த அடிப்படையில் தான் இந்த 'ஆறு நாள் யுத்தம்' மதிப்பிடப்பட வேண்டும்.

இலங்கையின் பிரபல அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் அரசியல் தீர்வு காண வேண்டும் என்றே பகிரங்கமாக கூறி வருகின்றனர்.

அதே நேரத்தில் அரசியல் தீர்வு இராணுவத் தீர்வு பற்றிய விவாதம் தான் தொடர்கின்றது

இந்த விவாதத்தில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலிதான் முக்கியத்துவம் வகிக்கிறார்

பிரிவினை கோரும் போராளிகள், முக்கியமாகப் புலிகள்தான் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதற்கு முட்டுக்கட்டையாகவும் இராணுவத் தீர்வு காணுவதில் அக்கறையாகவும் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அத்துலத்முதலி கூறுகின்றார்

இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்பதை புலிகளுக்குத்தான் சொல்லவேண்டும் என்பதும் அமைச்சரின் வாதம்.

இராணுவத் தீர்வில் நம்பிக்கை வைக்கவேண்டாம் என்று புலிகளுக்குக் கூறுவதுதான் அரசியல் தீர்வு காணுவதற்கான முதல் படியாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் நம்புகிறார்.

இராணுவ ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதன் மூலம்தான் புலிகளுக்கு அதைத் தெரியப்படுத்தலாம் என்று அமைச்சர் கருதுகிறார்.

பலமான நிலையில் இருந்துகொண்டுதான் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதும் அரச வட்டாரங்களின் கருத்து.

வட பகுதியில் இராணுவ ஆதிக்கத்தை உருவாக்குவதன் மூலம் சிங்களவரின் மனநிலையை உறுதிப்படுத்தி இழந்து போன சிங்கள ஆதரவை அரசாங்கம் மீண்டும் பெறமுடியும். இப்படியும் ஒரு வாதம்

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் கொழும்பு, புதுடில்லியில் முன்னேற்றம் கண்டுள்ளதாகக் கூறப்பட்ட வேளையில், இந்திய- இலங்கை உறவை பாதிக்கக்கூடிய முறையில் இந்த '6 நாள்' யுத்தம் அமைந்ததை, மேற்கூறப்பட்ட வாதங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்

இந்த இராணுவ நடவடிக்கை 3-4 தினங்களில் முடிவடைந்ததாக அரசுகூறியது.

ஆனால் யாழ்வாசிகள் இராணுவ நடவடிக்கை முடிவடைய 6 நாள் சென்றது என்று தெரிவித்தனர்.

அந்த 'யுத்தம்' முடிவடைந்து விட்டது. என்ன இராணுவ பாடங்களை கற்றுக் கொண்டோம் என்பதை அறிய வேண்டியுள்ளது.

முதலாவது: ஆயுதப் படையினர் கடலிலும் வானிலும் தான் சக்தி கூடியவர்களாக உள்ளனர். தரையில் அவர்களுக்குள்ள முட்டுக்கட்டை தொடர்கிறது

இரண்டாவது, இராணுவத்தின் ஆகாய பலத்துக்குச் சவாலாக போராளிகளின் ஆயுத பலம் மாறுமா?

இதன் கருத்து சாம்-7,

(முற்றும்)

## கோட்டைக்கு அருகில் சென்று வேலை செய்ய மேலிடம் உத்தரவு

### தொலைத் தொடர்பு ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஜூன். 20

யாழ். தொலைத் தொடர்பு திணைக்கள ஊழியர்களை பண்ணையில் கோட்டை முகாமிற்கு அருகில் உள்ள தொலைத் தொடர்புத் திணைக்கள பிரதான காரியாலயத்திற்கு மீண்டும் கடமைக்காக சமூகமளிக்கும்படி கொழும்பிலிருந்து திணைக்கள மேலிடம் உத்தரவிட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து திணைக்களத்தினால் இது தொடர்பாக அனுப்பப்பட்ட சுற்றுநிருபம் குறித்து திணைக்களத்தின் யாழ் அலுவலக ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

பண்ணை பொலிஸ் நிலையிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறும் வரை பழைய அலுவலகத்துக்கு செல்வதில்லை என திணைக்கள ஊழியர்கள் முடிவுசெய்துள்ளதாக தெரியவருகிறது.

இருந்தும் அவசர தேவைக்காக தொழில் நுட்ப ஊழியர் சில மணிநேரம் மட்டும் தினமும் அலுவலகத்திற்குச் சென்று கடமை புரிந்து வருகின்றார்கள்.

தொடர்ந்து ஒரு மாத காலமாக ஊழியர் அங்கு கடமைக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## ரஷ்யாவுக்கு புதிய தூதர்

கொழும்பு, ஜூன்.19

ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதர் பதவிக்கு வெளிநாட்டு அமைச்சைச் சேர்ந்த திரு ஜயந்த ராஜபக்ஷ நியமிக்கப்படவிருக்கிறார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் ... பூர்த்தியான ... பதவி ஏற்பார்.(உ-எ-2)

பொய்யாமொழி



குறள்:
புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

பொருள்:
புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்தலை விட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறப்பது அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.

## தீவுப்பகுதி ஆசிரியர் இனி திணைக்களத்தில் கையெழுத்திட முடியாது

யாழ்ப்பாணம், ஜூன். 20

கடந்த சில வாரங்களாக கல்வித் திணைக்களத்தில் தங்கள் வரவுக்குச் சான்றாகக் கையெழுத்திட்டு வந்த தீவுப்பகுதி ஆசிரியர்களுக்கு நேற்று முன்தினம் அதற்குரிய காலஎல்லை முடிவடைந்தது.

தொடர்ந்தும் ஆசிரியர்களுக்கு விடுமுறை வழங்கத்தான் அனுமதி அளிக்க முடியாதிருப்பதாக வட மாநில கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

தீவுப்பகுதி ஆசிரியர்களில் இக்கட்டான நிலைமைபற்றி தான் கல்வி அமைச்சுடன் கதைத்து அவர்களுடைய பிரச்சினைகளையும் சிரமங்களையும், தீர்த்துவைப்பதாகவும் கல்விப் பணிப்பாளர் ஆசிரியர்களிடம் உறுதியளித்தார். (இ-5)

## முருகமூர்த்தி வித்தியாசாலை பொருட்காட்சி

மானிப்பாய் ஜூன் 20

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை கல்விப் பொருட்காட்சி இம்மாதம் 23 ஆம் திகதி நடைபெறஉள்ளது

மானிப்பாய் வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் இப்பொருட்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (இ-90)

## சமய சந்நிதிகளில்

### தேர் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 20

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா இன்று இடம் பெறுகின்றது. நாளை தீர்த்தோற்சவம் நடக்கும். (இ-ஒ)

### மாவிட்டபுரம் பொலிகண்டியில்

காங்கேசன்துறை ஜூன் 20

பிரசித்திபெற்ற பொலிகண்டி கந்தவனக்கடவை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது

மேற்படி ஆலய உற்சவம் கடந்த 7ஆம் திகதி கொடியேற்றவிழாவுடன் ஆரம்பமாகிநடைபெற்று இன்று ரதோற்சவமும், நாளை தீர்த்த உற்சவமும் நடைபெறுகின்றன. (இ-ஒ)

### திருவிளக்கு பூசை

யாழ்ப்பாணம், ஜூன் 20

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தில் நாளை (சனிக்கிழமை) எட்டாவது திருவிழக்குப் பூசை நடைபெறவுள்ளது.

14.1 1986தைப்பொங்கல் அன்று ஆரம்பித்த இவ்வழிபாடுதொடர்ந்து பௌர்ணமி தோறும் நடைபெற்று வருகிறது.

ஆலயத் திருப்பணிகளுக்கு நிதி சேகரிக்கும் பொருட்டு "தோத்திர மாலை-திருவிளக்குப்பூஜை வழிபாடு" என்ற நூல் வெளியிடப்படுகின்றது.

கொக்குவில் மேற்கு குடுவெந்தான் பிள்ளையார் கோவிலிலும் திருவிளக்குப் பூசை நடைபெறும்.

(இ-ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரிலே ஆறு ரெலிபோன்களைச் சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக ரெலிபோன் சேவையிலேயே கண்ணும் கருத்தும் உள்ள ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிகுளோப் ரெலிபோன்: 25088
ஆறு சமாந்தர லைன்கள் கொண்டது

# உதயன்

20 – 06 – 1986 வெள்ளிக்கிழமை

பாதுகாப்பான சூழலில் ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி நேர சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர். ஜி. கட்டடம், ஸ்ரான்லி வீதி,

# கிளிநொச்சியில் 10 ஆயிரம் பேர் வரை இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20
கிளிநொச்சிப்பகுதியில் இருந்து சுமார் 10,000 பேர்வரை வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர் என்று உத்தேசமாக மதிப்பிடப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களாக கிளிநொச்சியில் தொடர்ந்து இடம் பெற்று வரும் சம்பவங்கள் காரணமாகவே இப்படிப் பெருந்தொகையானோர் இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

விமானக் குண்டுத் தாக்குதல் காரணமாக அகதிகள் தங்கி இருந்த 7 ஆம் வாய்க்கால் இந்து மகா வித்தியாலயத்தின் கட்டடம் ஒன்று பலத்த சேதத்துக்குள்ளானது.

பரந்தனில் உள்ள சந்தைக் கட்டடமும் சேதம் அடைந்தது.

கிளிநொச்சிப் பிரதேசம் துண்டிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றிய முழுத்தகவல்களையும் பெறமுடியாதுள்ளது.

ஆயுதப்படையினர் வந்து நடமாடித்திரியும் பகுதிகளில் உள்ள வீடுகள் பல தீக்கிரையானதாகவும் தெரிகிறது. பல வர்த்தக நிலையங்கள் கொள்ளை இடப்பட்டன.

தாக்குதல்களில் காயமடைந்தவர்களுக்கு வீடுகளிலும் அகதி முகாம்களிலும் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி இயங்க முடியாத நிலையில் உள்ளதே இதற்குக் காரணமாகும்.

கிளிநொச்சிக்கு அருகில் இருந்த தனியார் வைத்தியசாலைகள் முடப்பட்ட நிலையில் உள்ளன. மூன்று மைல் சுற்றுடலில் உள்ள அரச பாடசாலைகள் முடப்பட்டுள்ளன. அரசபணி மனைகள், வர்த்தக நிலையங்கள் முதலியன இன்னும் இயங்கத்தொடங்கவில்லை.

திருநகர், கணேசபுரம், கனகபுரம், இரத்தினபுரம், கனகாம்பிகைக் குளம், திருவையாறு, பரவிப் பாஞ்சான், கரடிப் போக்கு, பரந்தன் போன்ற பகுதிகளில் வாழும் மக்களே மாவட்டத்தில் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

விவசாய நடவடிக்கைகள் முற்றாக முடங்கி விட்டன. கால் நடைகள் கவனிப்பார் இன்றி இறந்து கொண்டிருக்கின்றன.

சுடுகாடு போன்ற நிலைமைதான் கிளிநொச்சிப் பகுதியில் நிலவுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-எ-6)

## சர்வகட்சி மாநாடு இந்திய உதவி தேவை - ரொனி

பாரிஸ், ஜூன் 20
அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டுக்கு இந்தியாவின் உதவியை எதிர்பார்க்கின்றோம்.

நிதிஅமைச்சர் ரொனி டி மெல், பாரிஸில் வைத்து நேற்று வியாழக்கிழமை இதை அறிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நிதி அமைச்சர் மேலும் சொன்னதாவது:

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கான ஆக்கபூர்வமான யோசனைகளை இலங்கை அரசு முன்வைத்துள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒன்பது மாகாணசபைகளை நிறுவுவதே அந்தப் புதிய யோசனை.

எந்த அரசும் வழங்கக் கூடிய நியாயமான தீர்வு இதுதான்.

இப்படி நிதி அமைச்சர் சொன்னார்.

(அ-எ)

## அதிபர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 20
பாடசாலை அதிபர்களுக்கான யாழ் கல்வித்திணைக்களத்தின் பயிற்சி நெறிக் கருத்தரங்குஒன்று இன்று தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை வரை தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும்.

தரம் 3 பாடசாலை அதிபர்களுக்கான இந்தப்பயிற்சிநெறிக் கருத்தரங்கு, இன்று காலை 8 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படும்.

இக் கருத்தரங்குகளில் கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம், பாடசாலை முகாமைத்துவ ஆலோசகர் அ. பஞ்சலிங்கம், பிரதம கல்வியதிகாரி க கந்தசாமி, நிர்வாக அதிகாரி கே சந்திரராசா, கே. சோமசுந்தரம், எஸ். சிவராசா ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்.

இறுதிநாளான புதன் கிழமை கல்விப்பணிப்பாளர் அதிபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவார்

(இ-5)

## இராணுவம்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
ரோந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னேறி வந்த சிப்பாய்களை எதிர்த்து போராளிகள் ரொக்கட் லோஞ்சர்கள் மூலம் தாக்குதல் மேற்கொண்டதில் மூன்று சிப்பாய்கள் பலியானதாக தெரியவருகிறது ஐந்து பேர் படுகாயமடைந்ததாக முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன

இந்தச் சம்பவங்களை யடுத்து ஹெலிக்கொப்டர் ஒன்றும் இப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த பெண்மணி ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வடக்குப் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த மார்க்கண்டு பவளம் (45 வயது) என்ற பெண்ணே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

(உ-10)

# விளையாட்டரங்கு

## 66 அணிகள் பங்குபற்றிய உடற் பயிற்சிப் போட்டி

### வண்ண உடையில் 1500 மாணவர்

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்ப்பாணப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி நேற்று யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் கண்ணைக் கவரும் விதத்தில் நடைபெற்றது

நேற்றுக் காலை முதல் மாலைவரை சுமார் ஆயிரத்து ஐநூறு மாணவ, மாணவியர் வண்ண உடைதரித்து சிறப்பாக உடற்பயிற்சி செய்தது பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்தையும் இணைத்து பெரிய அளவில் சிறப்பாக உடற்பயிற்சி போட்டி ஒன்றை கல்வித் திணைக்கள உடற்பயிற்சிப் பிரிவு நடத்தியது.

இளம் சிறுர்கள் அணி அணியாக ஆர்வத்துடன் உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

போட்டியில் பங்குபற்றிய 66 அணிகளில் பின்வரும் கல்லூரிகள் முதலாம் இடத்தைப் பெற்றன

**பெண்கள் பிரிவு**

பதின் மூன்று வயதுப் பிரிவு- உடுவில் மகளிர் கல்லூரி.

பதினேழுவயதுப்பிரிவு- யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி.

பத்தொன்பது வயதுப் பிரிவு- சுன்னாகம் இராமநாதன் கல்லூரி.

**ஆண்கள் பிரிவு**

பதின்மூன்று வயதுப் பிரிவு- சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்.

பதினேழுவயதுப்பிரிவு- உரும்பிராய் இந்துக் கல்லூரி.

பத்தொன்பது வயதுப் பிரிவு - மானிப்பாய் மெமோரியல் கல்லூரி.

அணிநடைப் போட்டிகளும் நடைபெற்றன

வெற்றி பெற்ற வீரர்களுக்கான வெற்றிக் கேடயங்களை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் வழங்கினார்.

வட்டாரக்கல்வி அதிகாரி (உடற்பயிற்சி) திரு. வி கணேசலிங்கம் பிரதம கல்வியதிகாரி திரு. ஆர். தங்கராஜா ஆகியோர் இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளைத் திறம்படச் செய்திருந்தனர்.

இளம் மாணவர்களின் "ஜிம்னாஸ்டிக்" கண்காட்சியும் இடம்பெற்றது.

(உ)

## உலகக் கிண்ணம்

### இங்கிலாந்து,ஸ்பெயின் கால் இறுதிக்கு தெரிவு

மெக்ஸிக்கோ,ஜூன்19
மெக்ஸிக்கோவில் நடைபெற்று வரும் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் கால் இறுதியாட்டங்களுக்கு இங்கிலாந்து ஸ்பெயின் அணிகள் தெரிவாகின.

நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்து பராகுவே அணியை 3-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது

கால் இறுதியாட்டத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்து அணி ஆர்ஜென்ரினா அணியுடன் மோதும்.

புதன்கிழமை நடைபெற்ற மற்றொரு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் டென்மார்க் அணியை ஸ்பெயின் அணி ஆச்சரியப்படத்தக்க தக்க விதத்தில் 5-1என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது

(உ)

## மலையக தமிழ் இளைஞர் காணமல் போகும் மர்மம்

### பெற்றோர் பொலிஸில் புகார்

கொழும்பு, ஜூன் 20
பதுளை மாவட்டத்தில் உள்ள தோட்டங்களில் இருந்த மலையகத் தமிழ் இளைஞர்கள் பலர் காணமல் போய்விட்டனர் என்று பொலிஸுக்கு முறையிடப்பட்டுள்ளது:

அப்பகுதி பொலிஸ் நிலையங்களில் இது சம்பந்தமாக பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்,

அம்முறைப்பாடுகள் பற்றி பொலிஸ் விசாரணை செய்து வருகின்றனர்.

இதனிடையில் பதுளை மாவட்டத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்களைக் கைது செய்யும்படி பதுளைப் பொலிஸ் அதிபர் காமினி ரன்தெனி உத்தரவிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து மகியங்கனைப் பொலிஸார் 7 தமிழ் இளைஞர்களையும், 3 சிங்கள இளைஞர்களையும் கைது செய்தனர்.

பதுளைக்கு வந்திருந்த மூன்று கொழும்பு வாசிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பதுளைக்கு வந்ததற்கான காரணங்களைத் தெரிவிக்கத் தவறியதாலேயே இம்மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(இ-எ)

## இரகசிய

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
இரகசிய வியாக்கியானங்களையும் விளக்கங்களையும் கையளித்தார்.

இச்சந்திப்பு 20 நிமிடங்கள் நீடித்தது.

சந்திப்பின்போது பிரதமருடன் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி வெங்கடேஸ்வரன், முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி ஆகியோரும் இருந்தனர்,

(உ-எ)

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவ உயரதிகாரி ஒருவர் உட்படபல இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

சிப்பாய்கள் வாகனங்களிலும் நடை பவனியாகவும் முகாமிலிருந்து சிறிது தூரம் சென்றனர்.

இவர்களை எதிர்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நவீனரக ஆயுதங்கள் கொண்டு இவர்களைத் தாக்கி மேற்கொண்டு செல்லவிடாது தடுக்க முயன்றனர். அப்போது இரு சாராரும் கடுமையாக மோதினர்

படையினர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. இதனால் பல பொதுமக்களும் காயமடைந்திருக்கலாம் என அஞ்சப்பட்டது.

தாக்குதலின் போது படுகாயமுற்ற இராணுவ சிப்பாய்கள் உடனடியாக ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று பிற்பகல் வரை இப் பகுதியில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிய வருகிறது.

(உ-10)

## பென்ஷன்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
வெட்டி, காரைநகர், சாவகச்சேரி, வேலணை.

26 ஆம் திகதி:- அச்சுவேலி, புங்குடுதீவு, சழிபுரம், காங்கேசன்துறை.

27 ஆம் திகதி:- யாழ்ப்பாணம், கைதடி.

ஜூலை முதலாம் திகதி பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, சுன்னாகம், வயாவிளான்.

2 ஆம் திகதி - தெல்லிப்பளை, கோப்பாய், பண்டத்தரிப்பு, வண்ணார்பண்ணை

3 ஆம் திகதி:- கொக்குவில், மானிப்பாய், உரும்பராய், யாழ்ப்பாணம்.

4 ஆம் திகதி:- கரவெட்டி, வல்வெட்டித்துறை, சங்கானை, கொடிகாமம்.

7 ஆம் திகதி:- ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு.

கொடுப்பனவுகள் யாவும் கோட்டை முகாம் வங்கியிலேயே நடைபெறும். (உ - 5)

## முல்லைத் - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் பெரும் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

மோதல் காரணமாக நேற்று யாழ்ப்பாணம்-முல்லைத்தீவு இ. போ. ச பஸ்கள் இடைவழியுடன் திரும்பி வந்தன. (இ-10)

## 8 லட்சம் தமிழரை - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டாக பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட முடியாது.

யாழ் குடாநாட்டில் மக்களுடன் தீவிரவாதிகளும் வாழ்கிறார்கள். தீவிரவாத முகாம்கள் மீது ஆயுதப்படையினர் குண்டு போட்ட போது சில சமயம் குடி மக்களும் கொல்லப்பட்டனர். இது தவிர்க்க முடியாத ஒன்று.

அரசாங்கப் படைகள் தமிழ்க் குடிமக்களைக் கொல்வதாக சர்வதேச பத்திரிகைகள் அரசாங்கத்தைக் கண்டித்தன

ஜெயவர்த்தனா என்ன செய்து கொண்டிருக்கிறார்? இப்படிச் சிலர் கேட்கிறார்கள்.

ஹிட்லர், முசோலினி என்று என்னை அழைக்கின்றனர்.

40 லட்சம் மக்கள் வாக்களித்து என்னைத் தெரிவு செய்தார்கள்.

ஹிட்லர், முசோலினி ஆகியோர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லர்

கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், திருமலை பஸ் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் கவனயீனத்தினால் நிகழ்ந்தன

கட்டுநாயக்கா எயர் லங்கா விமானக் குண்டு வெடிப்பு உள் விட்டுச் சதிச் செயலினால் இடம் பெற்றது.

மறைக்க விரும்பவில்லை

நான் ஒன்றையும் ஒளித்து மலைக்க விரும்பவில்லை. அப்படிச்செய்வதினால் எனக்கு என்ன லாபம் வந்து விடப் போகிறது?

இப்போது நாட்டில் இடம் பெறுவது இன, மொழிப் பிரச்சினை அல்ல மார்க்ஸிஸ அரசு ஒன்றை நிறுவும் போராட்டமே இப்போது இடம்பெறுகின்றன.

தீவிரவாதிகள் நவீன ஆயுதங்களுடன் போராடுகின்றார்கள். நீண்ட தூரத்துக்குச் சுடும் ஆயுதங்களும் அவர்களிடம் உள்ளன.

உலகம் இன்று இந்தியா சொல்வதைத் தான் கேட்கிறது, இந்தியா பெரிய நாடு உலகில் இலங்கைக்கும் நண்பர்கள் உண்டு, ஆனால் அவர்கள் நாம் சொல்வதைக் கேட்கத் தயாராக இல்லை.

தென் இலங்கையில் தடை செய்யப்பட்ட கட்சி ஒன்று குழப்பத்தை உண்டாக்குவதில் ஈடுபட்டு உள்ளது. அக் கட்சியின் சிலர் சிறையில் உள்ளனர். ஆனால் வெளியில் உள்ள சிலர் தான் குழப்பத்தை ஏற்படுத்துவதில் ஈடுபட்டு உள்ளனர்

மகா சங்க உறுப்பினர்களுக்குக் காட்டுவதற்காகச் சில பத்திரிகைகளைக் கொண்டு வந்திருக்கிறேன்.

'இந்து' பத்திரிகைச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. அச் செய்தியின் தலைப்பு "ராஜீவிடமிருந்து ஜே ஆருக்கு வந்த கடுமையான வார்த்தைகள்" — என்பது.

ராஜீவிடம் இருந்தோ வேறு எவரிடமிருந்தோ எனக்குக் கடுமையான வார்த்தைகள் வரவில்லை.

அந்தப் பத்திரிகை என்னைக் கண்டித்துள்ளது.

அமெரிக்க 'டைம்' பத்திரிகை தீவு ஒன்றில் யுத்தம் என்று கட்டுரையைப் பிரசுரித்துள்ளது.

இந்தியாவில் செல்வாக்கு மிக்க மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாடு ஆத்திரம் அடைந்தால் இந்தியாவே ஆத்திரமடைகின்றது.

இந்திய மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசின் ஆதரவு தேவை. அதை உடைக்க இந்தியப் பிரதமர் விரும்பவில்லை.

எம்மை இந்தியா 100 சதவீதம் ஆதரித்தால் மட்டுமே உலகமே எம்மை ஆதரிக்கும்

மாவட்ட சபைகள், மாகாண சபைகளுக்கு அதிகாரப்பரவலாக்கல் செய்வதன் மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்படும்

இதை விரும்பாதவர்கள் அடுத்த தேர்தலில் எதிர்த்து வாக்களிக்கலாம்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொன்னார்.

(இ-எ)

## பஸ்கள் திரும்பி வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, முல்லைத்தீவு பகுதிகளுக்குப் புறப்பட்ட பஸ்களில் சில நேற்று இடையில் திரும்பி வந்தன.

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று போராளிகள் — சிப்பாய்கள் மோதல் நடைபெற்றதன் காரணமாகவே இந்த பஸ்கள் திரும்பி வந்ததாகச் சொல்லப்படுகிறது

கொழும்பில் இருந்து வந்த சில பஸ்கள் வவுனியாவில் தரித்து நிற்பதாகவும் கூறப்படுகிறது.

(இ -1 0)

## வயாவிளானில்-

வேட்டைக்காக நவீனரக ஆயுதங்களுடன்வெளியே வர முயன்றனர்.

இவர்களை வெளியேறுது தடுக்கும் முகமாக மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

மக்கள் விடுதலைப்படையினர் நடத்திய மோட்டார் தாக்குதலில் 6 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

மக்கள் விடுதலைப் படைக்கும் சிறீலங்கா சிப்பாய்களுக்கும் இடையிலான துப்பாக்கிச் சமரில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இதனை அடுத்து வயாவிளான் முகாமுக்கு சிறீலங்கா சிப்பாய்கள் பின் வாங்கினர்.

மக்கள் விடுதலை வீரர்கள் தரப்பில் எதுவித இழப்புமில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## 2 கப்பல்களிலிருந்து படையினர் இறக்கப்பட்டனர் வாகனங்களும் வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 20
காங்கேசன்துறைடற் பகுதியில் நேற்று அதிகாலையில் இரண்டு கப்பல்களில் படையினர் கொண்டுவந்து இறக்கப்பட்டனர்.

இரண்டு நவீன வாகனங்களும் பொருள்களும் அக்கப்பல்களில் கொண்டு வரப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

கப்பல்களில் வந்த நூற்றுக்கு மேற்பட்ட படையினர் பீரங்கிப்படகுகள் மூலம் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டனராம்.

வடபகுதி முகாம்களில் கடமையாற்றிய சிப்பாய்கள் பலர் நண்பகலுக்குப் பின்னர் அந்த இரண்டு கப்பல்களில் தென் இலங்கை நோக்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இ-எ-6)

## இளைஞனுக்கு 1 வாரச் சிறை

கொழும்பு ஜூன் 20
தீவிரவாத சந்தேகநபர் ஒருவர் பற்றித் தெரிந்திருந்தும் பொலிஸுக்குத் தகவல் கொடுக்கத் தவறியதற்காக வவுனியாவைச் சேர்ந்த சேது காவலர் என்ற இளைஞனுக்கு ஒருவாரச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சேவிக்னராஜா இத்தண்டனையை வழங்கினார்

(இ-எ)

## குருநகர்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
யாகத் தெரியவருகின்றது,

சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியை ஆயுதப் படை உயர் அதிகாரிகள் சென்று பார்வையிட்டு அதற்கான அனுமதி வழங்கியதாகவும் அறியப்படுகிறது.

அப்பகுதியில் தற்சமயம் கடற்படையினரின் ரோந்து சேவை பலப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(இ – எ - 6)

## சர்வகட்சி மாநாட்டுக்கு ந. ல. ச. ச உறுப்பினர்கள்

சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றும் பிரதிநிதிகளை நவலங்கா சமசமாஜக்கட்சி தெரிவு செய்து விட்டது.

தூதுக்குழுவுக்கு கட்சிப் பொதுச்செயலாளர் டாக்டர் விக்ரமபாகு கருணரத்தின தலைமை வகிப்பார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்கள் வருமாறு;

1. திரு. வாசுதேவ நாணயக்காரா, அமைப்புச் செயலாளர்.
2. திரு. ஏ. கே. அண்ணாமலை, தேசியப் பிரச்சினைக்குழுவின் செயலாளர்.

(இஎ)

## வடபகுதி சந்தேக நபர்கள் இருவருக்கு பிடியாணை

கொழும்பு, ஜூன் 20
முத்துவாரம் ஒக்சிஜன் சிலிண்டர் வெடிச் சம்பவம் தொடர்பாக கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களும் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் கடந்தவாரம் ஆஜராகத் தவறிவிட்டனர்.

அதைத் தொடர்ந்து இரண்டு சந்தேக நபர்களான சின்னத்துரை சதிதியசீலன், கே. டி எம். நிஸாம் ஆகியவர்கள்மீது கொழும்பு பிரதம நீதிவான் கொலின் அமரசிங்க பிடியாணை பிறப்பித்தார்.

செப்டம்பர் 8ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

முத்துவாரம் ஒக்சிஜன் சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் மார்ச் 18இல் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இரண்டு சிங்களத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

(இ-எ)

## ரூபா நாலரை லட்சம் கொள்ளையில் தமிழகத்தில் பயிற்சி பெற்ற சிங்கள இளைஞன்

கொழும்பு, ஜூன் 20
மலையகத்தில் உடபாகேதோட்டத்தில்நாலரை லட்சம் ரூபா கொள்ளை இடப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதான சிங்கள இளைஞர் ஒருவர் தமிழ் நாட்டில் பயிற்சி பெற்றதாக ஒப்புக்கொண்டுள்ளாராம்.

அவிசாவலை பொலிஸார் இதனைத் தெரிவித்தனர்.

தெரணியகலையில் வைத்து இந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார்

கொள்ளை இடப்பட்ட பணம் தீவிரவாத இயக்கத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(இ எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 18 ஆம் இலக்கத்தில் உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 20—6—1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 18 Second Lane, Power House Road JAFFNA Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Number Q J 80 W/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org